ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2110/10 - 2019 පෙබරවාරි මස 12 වැනි අඟහරුවාදා - 2019.02.12

*2110/10 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 12 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 9/ 2011*

**1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச்சட்டம்**

72 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 71 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 72 ஆம் பிரிவின் மூலம் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மங்கள சமரவீர ஆகிய நான், இதற்கான அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனங்களை இரண்டாயிரத்துப் பத்தொன்பதாம் ஆண்டு பெப்புருவரி மாதம் 12 ஆந் திகதியிலிருந்து வலுவுக்கு வருமாறு 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட மக்கள் வங்கியிடம் இக்கட்டளையின் மூலம் உரித்தாக்குகிறேன்.*

மங்கள சமரவீர,
நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்.

கொழும்பு,
2019, பெப்புருவரி 12.

**அட்டவணை**

*மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோரளே, மெதபற்று, பாதுக்க பிரதேச செயலாளர் பிரிவின் சீதாவக பிரதேச சபை எல்லையில் 455 ஆம் இலக்க வேரகல கிராம அலுவலர் பிரிவின் வேரகல கிராமத்தில் அமைந்துள்ள உரிமம்பெற்ற நில அளவையாளர் யூ. திலகா நந்தனீ அவர்களால் 2018.04.05 ஆந் திகதியிடப்பட்ட 45/ 2018 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்ட "எட்டஹெரலியகஹலந்த கெபெல்ல" என்னும் காணியிலிருந்து பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான துண்டு 1 இன் துண்டு 1A ஆனது- வடக்கு : PP. கொ. 9670 இன் துண்டு 131 (பாதைக்கான ஒதுக்குதல்) ; கிழக்கு : 1188 ஆம் இலக்க,*

*வரைபடத்திலுள்ள துண்டு 2B ; தெற்கு : ஜே. ஐ. எதிரிசிங்கவுக்குரிய அதே காணியின் மிகுதிப்பகுதி ; மேற்கு : எல். கல்தேராவுக்குரிய அதே காணியின் மிகுதிப் பகுதி ஆகிய எல்லைகளையும் மண், மரங்கள் மற்றும் அதன் மீது அமைந்துள்ள ஒவ்வொன்றையும் சேர்த்து 0.03089 ஹெக்டேயர் அல்லது பன்னிரண்டு தசம் இரண்டு ஒன்று பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 12.21பே.) எனும் விஸ்தீரணத்தையும் கொண்டுள்ளது.*

*மேலே விபரிக்கப்பட்ட காணிப்பகுதி இதன் கீழ் தரப்பட்டுள்ள காணியின் பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமாகும்.*

*மேலே சொல்லப்பட்ட 455 ஆம் இலக்க வேரகல கிராம அலுவலர் பிரிவின் வேரகல கிராமத்தில் அமைந்துள்ள உரிமம்பெற்ற நிலஅளவையாளர் யூ. திலகா நந்தனீ அவர்களால் ஆக்கப்பட்ட 2009.08.16 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 3605 இல் விபரிக்கப்பட்ட "எட்டஹெரலியகஹலந்த கெபெல்ல" என்னும் காணியிலிருந்து பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான துண்டு 1 ஆனது- வடக்கு : பாதுக்கவிலிருந்து இங்கிரிய வரையான பிரதான வீதியும் ; கிழக்கு : 1188 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்ட துண்டு 2 ; தெற்கு : ஜே. ஐ. எதிரிசிங்கவுக்குரிய அதே காணியின் மிகுதிப் பகுதியும் ; மேற்கு : எல். கல்தேராவுக்குரிய அதே காணியின் மிஞ்சிய மண், மரங்கள் சகலதும் மற்றும் அதன்கண் அமைந்துள்ள ஒவ்வொன்றும் சேர்த்து ஆகிய இவ்வெல்லைகளினுள் பதின்மூன்று பேர்ச் (0ஏ. 0றூ. 13பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.*

*மேற்குறித்த காணி அவிசாவளை காணிப்பதிவகத்தில் என் 424/119 ஆம் பக்கத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.*

*03-41*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*